## தலைப்பு 316 – வடமேல் மாகாண சபை – 2022

### 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

“நிலைபேறான அபிவிருத்தியடைந்த வடமேல் மாகாணம்”

### 1.2 செயற்பணி

“வடமேல் மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு உலகலாவிய ரீதியில் போட்டியை எதிர்கொண்டு திருப்திகரமான மக்கள் சமூகமொன்றையும் சிறந்த பொருளாதாரமொன்றையும் பசுமையான சூழலையும் உருவாக்க பௌதீக நிதி மற்றும் மனித வளங்களை முகாமை செய்தல்”

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

#### மொத்த நிதி ஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்பு

வடமேல் மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 38,791.00 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 37,367.26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,423.74 மில்லியன் அல்லது தேறிய நிதி ஏற்பாடுகளில் 4 சதவீதம் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த மொத்த சேமிப்பில் ரூபா 717.44 மில்லியன் அல்லது 32 சதவீதம் மூலதன நிதிஏற்பாடுகளாக இருந்ததுடன், மீண்டெழும் நிதி ஏற்பட்டில் சேமிப்பு ரூபா 706.30 மில்லியன் அல்லது 2 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | |
|---|---|---|---|---|
| | | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 36,526.00 | 35,819.70 | 706.30 | 2 |
| மூலதனம் | 2,265.00 | 1,547.56 | 717.44 | 32 |
| **மொத்தம்** | **38,791.00** | **37,367.26** | **1,423.74** | **4** |

### 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.